**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. 31/2025**

**நாள்.07.02.2026**

ம.சா.1 திருமதி.கார்த்திகாயினி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் தாசில்தார் அலுவலகத்தில் டிரைவராக வேலை செய்கிறார் என்றால் தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான் என்றால் சரிதான். எனது மகன் இறந்தது சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வேறு எந்த ஆவணமும் எங்களிடம் இல்லை என்றால் சரிதான், மற்ற ஆவணங்கள் டாக்டர்.மனோஜ்குமாரிடம் உள்ளது. எனது மகனுக்கு டாக்டர் மனோஜ்குமாரிடம் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை சிகிச்சை எடுத்தார் என்று எனது நிரூபண வாக்குமூலத்திலும், எனது மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என் மகன் படிக்கட்டில் பயணம் செய்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் என் மகன் பேருந்து உள்ளே இருந்த மேல் படிக்கட்டில் பயணம் செய்தார். ம.சா.ஆ.1 முதல் 3-ன் படி எனது மகனுக்கு இடது கையில் அடிபட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

போக்குவரத்து சட்டத்தின்படி, படிக்கட்டில் பயணம் செய்யக்கூடாது என்று எனக்கும், என் மகனுக்கும் தெரியும் என்றால் சரிதான். பிரேக் அடித்ததில் படிக்கட்டில் இருந்து தவறி கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.2, 3-ல் தலையில் காயம் இருந்ததாக குறிப்பு எதுவும் இல்லை



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.02.07 17:33:35 +0530

என்றால் இல்லை. என் மகன் என்ன வேலை செய்தார் என்பதற்கான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

விபத்து நடந்த தேதி 16.09.2019 என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகள் கழித்து என் மகன் இறந்தான் என்றால் 07.07.2024ம் தேதி இறந்தார். இடைப்பட்ட காலத்தில் தொடர் சிகிச்சை எடுத்ததாக காண்பிக்க எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

நான் 100 வேலை திட்டத்தில் சூப்பர்வைசராக வேலை பார்க்கிறேன் என்றால் அப்போது பார்த்தேன், தற்போது பார்க்கவில்லை. நானும் என் கணவரும் என் மகனின் வருமானத்தை சார்ந்து இருந்ததில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகன சட்டப்படி, ஒரு பயணி படியில் பயணம் செய்து, விபத்து ஏற்பட்டால் அதற்கு காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் மகன் விபத்தினால் ஏற்பட்ட காயத்தால் இறக்கவில்லை என்றாலும், அவருக்கு ஏற்பட்டது இயற்கை மரணம் என்றாலும் சரியல்ல. 2019ம் ஆண்டு ஏற்பட்ட விபத்திற்கு 2025ம் ஆண்டு இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.07 17:33:38 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .